லக்னோ அருங்காட்சியகத்தில் முன்னாள் முதல்வர்

# அகிலேஷ் யாதவுடன் பா.ஜ.க.வினர் கடும் வார்த்தைப்போர்!

## உத்தரப்பிரதேசத்தில் பதற்றம்!

லக்னோ, அக்.14-

லக்னோவில் உள்ள சோசலிசத் தலைவர் ஜெயப்பிரகாஷ்நாராயணன் அருங்காட் சியகம் அருகே முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவுக்கும், பா.ஜ.க. வினருக்கும் இடையே வெடித்த கடும் வார்த்தைப் போர் உத்தரப்பிரதேசத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்திஉள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ளமறைந்த சோசலிச தலைவர் ஜெயப்பி ரகாஷ் நாராயண் அருங்காட்சியகம் தற்போது அரசியல் சர்ச்சையில் சிக்கியுள்ளது.

லக்னோவில் உள்ள ஜெயப்பிரகாஷ் நாராயணன் இன்டர்நேஷனல் சென்டரின் (ஜெ.பி.என்.ஐ.சி.) நுழைவாயில் நள்ளிரவு தகரத்தடுப்புகளால் மறிக்கப்பட்டதாகவும், அங்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் சமாஜ்வாதி கட்சி ஆளும் பா.ஜ.க. மீது குற்றம் சாட்டியது. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் பிறந்த நாளில் ஜெ.பி.என். ஐசியில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வுக்கு முன்பாக இந் தச் சம்பவம் நடந்துள்ளது.

மேலும்சமாஜ்வாடிகட்சி அலுவகம் முன்பு போலீஸ் தடைகள் போடப்பட்டிருக்கும் வீடியோ ஒன்றையும் அகிலேஷ் யாதவ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில், “பா.ஜ.க. வினர் மற்றும் அவர்களின் அரசு என எதுவாக இருந்தாலும் அவர் களின் ஒவ்வொரு செயல்களும் எதிர்மறைகளின் குறியீடாகவே உள்ளன. கடந்த முறை நடந்தது போலவே, ஜெயப்பிரகாஷ் நாராயணின் பிறந்த நாளில் அவரின் சிலைக்கு சமாஜ்வாதி கட்சி யினர் மரியாதை செய்வதை தடுப்பதற்காக எங்களுடைய சொந்த இடங்களைச் சுற்றி போலீஸ் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பா.ஜ.க. எப்போதுமே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், சுந்தந்திர போராட்ட இயக்கத்துக்கும் எதிரானது. காலனியாதிக்க வாதிகளுடன் இருந்தும், ரகசியமாக அவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் பாதைகளை எப்படித் தடுப்பது என்பதை கற்றுக் கொண்டுள்ளனர். இப்போது அனைவரும் சொல்லத் தொடங்கி விட்டனர் பா.ஜ.க. எங்களுக்கு வேண்டாம்” என்று தெரிவித்துள்ளார்.

அகிலேஷின் இந்தக் குற்றச்சாட்டுக்கு பா.ஜ.க. தீவிரமாக பதிலடி கொடுத்துள்ளது.

உத்தரப்பிரதேச பாஜகவின் செய்தித் தொடர்பாளர் அலோக் அவஸ்தி தனது எக்ஸ் பக்கத்தில், “பாரதிய ஜனதா கட்சி எல்லா பெரிய மனிதர்களுக்கும் மதிப்பளிக்கிறது; மரியாதை செய்கிறது. தவறான ஆட்சி, அராஜகம், ஊழலுக்கு எதிரான இயக்கத்தை ஜெயப்பிரகாஷ் நாராயணன் வழிநடத்தினார். அவர் எளிமையின் அடையாளம்.

ஜெயப்பிரகாஷ் நாராயணின் ஏதாவது ஒரு குணம் உங்களிடம் உள்ளதா அகிலேஷ் யாதவ்? ஆடம்பரமான வாழ்க்கையை அனுபவிக்கிறீர்கள்.

உங்களின் ஆட்சியில் அராஜகம், தவறான நிர்வாகம், கலவரக்காரர்கள், ஊழல்வாதிகள் ஆட்சி செய்தனர்.

உங்களின் நடத்தைகள் ஜெயப்பிரகாஷ் நாராயணன் மற்றும் லோகியா ஆகியோரின் நடத்தை மற்றும் எண்ணங்களுக்கு எதிரானது” என்று தெரிவித்துள்ளார்.

கட்டுமான பணி மற்றும் மழை காரணமாக பூச்சிகள் தொல்லைகளை காரணம் காட்டி, ஜெ.பி.என்.ஐ.சி.க்குள் நுழைய அகிலேஷ்யாதவுக்கு அனுமதிமறுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த சர்ச்சை உருவானது. அருங்காட்சியகத்து முன்னாள் தகரத் தடுப்புகள் வைக்கப்பட்டிருந்ததற்கு முன்பு நின்று அகிலேஷ், பா.ஜ.க. மீது குற்றம்சாட்டி பேசினார்.

“இந்தத்தகரதடுப்புகளை வைத்திருப்பதன் மூலம் எதை மறைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கிறது. இங்கு ஓர் அருங்காட்சியகம் கட்டப்பட்டது. நாங்கள் அந்த சோசலிச சிந்தனையாளர், சிறந்த மனிதருக்கு மரியாதை செய்ய விரும்புகிறோம்.

இந்த அரசு ஏன் அதனைத் தடுக்கிறது? இந்த அரசு பயப்படுகிறது. ஆனால் அவருடைய சித்தாந்தத்தை நிறுத்த முடியுமா?

இவ்வாறுதடுத்துநிறுத்தப் படுவது இது முதல் முறை இல்லை. ஒவ்வொரு முறையும் இந்தநாளில் பல சோசலிஸ்ட்டுகள் இங்கே கூடுகின்றனர். அவர்கள் சிலைக்கு மாலைஅணிவித்துதங்களின் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

முழுப் புரட்சிக்கான முழக்கத்தை வழங்கிய அந்த சிறந்த தலைவர் அப்போதைய அரசின் முன்பு ஒரு போதும் பணிந்து போகவில்லை” என்றார் அகிலேஷ் யாதவ்.

முன்னதாக, கடந்த ஆண்டும் ஜெ.பி.என்.ஐ.சி.க்குள் நுழையஅகிலேஷ்யாதவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவர்திரும்பிச் செல்ல கேட்டுக்கொள்ளப்பட்டார். என்றாலும் அவர் ஜெ.பி.நாரயணனின் சிலைக்கு மரியாதை செய்ய சுவர் ஏறி குதித்தார்.

ஜெ.பி.என்.ஐ.சி. கடந்த 2016-ஆம் ஆண்டு அகிலேஷ் யாதவ் உத்தரப்பிரதேசத்தின் முதல்வராக இருந்த போது திறந்து வைக்கப்பட்டது.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மீனவ ஐக்கிய பஞ்சாயத்து சபை சார்பாக நடைபெற்ற டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா மாளிகை திறப்பு விழா நடைபெற்றது. பா.கோதண்டன் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, மாளிகை திறந்து வைத்தார்.உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, ஜட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.மதிவாணன், இரா.லட்சுமணன், இரா. செந்தில்குமார், பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, உமா சரவணன், பானுமதி சுந்தர், ஆர்.வெற்றிவீரன், ஆர்.டி.ராஜா, எஸ்.கே.இளங்கோ, நா.கோதண்டன், மா. நாகராஜன், பொ.து. ராஜா, என். கிருஷ்ணன், சி.பிரேம்குமார், கிருஷ்ணன் ராஜ், பவர் குப்பம் ராமமூர்த்தி, ஜே.பிரேம் ஆனந்த், பா.ஆறுமுகம், கே.ஜெகதீசன், எஸ்.டி.செல்வம்மணி, எஸ்.வினோத்குமார், சீமான் ரங்கராஜ், என். கிருஷ்ணன், ரகு பிரசாந்த், ஏ.அற்புதம், தா.ஜெயபால், வீதி ரமேஷ், சே.டில்லிபாபு, ஏ.சிவராஜ், எம்.ஹரி கிருஷ்ணன், இரா. கரிகாலன், இரா. பிரகாஷ் சீனிவாசன், வீ.வடிவேல் ஆர். சுப்பிரமணி, ஆர்.டி.ராஜா, எம்.எஸ்.சரவணன், டி.மணி, பி.மணி, குப்பராஜ், ஆர்.முத்துவீரன் நன்றி கூறினார்.

சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை. அக் 13-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவுறுத்தலின் படி வருகிற 29. 10 .2024 அன்று புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர் சேர்க்கவும், மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம், முகவரி மற்றும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப். பட்டுள்ளது. இது தவிர 9.11.2024, 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை 23.11.2024 சனிக்கிழமை 24.11.2024 ஞாயிற்றுக் கிழமை ஆகிய நான்கு நாட்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களின் பெயர்கள், இடம் மாறிய வாக்காளர்கள், 1.1.2025 ல் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப்படிவங்களை அந்தந்த வாக்குச் சாவடி முகாம்களில் கொடுக்க வேண்டும். இதன் அடிப்படையில் 2025 ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது முழுமை அடைந்தவர் களின் பெயர்களையும்புதிதாக குடி



பெயர்ந். துள்ள வாக்காளர் களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போது உள்ள வாக்காளர்பட்டியலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள் ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக வார்டு கழக ஊராட்சி கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி முழுமையாக வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான மேற்கொண்ட பணி விவரங்களை மாவட்ட கழக அலுவலகத் திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# 10, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கு தேர்வு அட்டவணை இன்று வெளியீடு!

சென்னை, அக்.14-

வரும் திங்கட்கிழமை 10, 11, 12 ம் வகுப்புகளின் தேர்வு தேதியை பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி வெளியிட உள்ளார் என பள்ளிக்கல்வி துறை தெரிவித்துள்ளது.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை இன்று (அக். 14) அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிடுகிறார்.

தமிழகத்தில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு மார்ச் ஏப்ரல் மாதங்களில் நடைபெறும். இந்நிலையில் நடப்பு (2024-25) கல்வியாண்டுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அக். 14ஆம் தேதி வெளியிட உள்ளார்.

இதுபற்றி பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட அறிவிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு முதல்வர், துணை முதல்வர் ஆகியோருடன் மேற்கொண்ட ஆலோசனையின் பேரிலும், அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோயம்புத்தூரில் இன்று (14.10.2024) 10,11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு அட்டவணையை வெளியிடஉள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியம் சார்பில்

# முரசொலி செல்வம் திருவுருவப்படத்திற்கு மரியாதை!

## கே.சீதாராமன் தலைமையில் மலர்தூவி அஞ்சலி

வேலூர், அக்.13-

11.10.2024 அன்று முற்பகல், வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் மேற்கு ஒன்றியத்தின் சார்பில், மறைந்த அய்யா. முரசொலி செல்வம் அவர்களின் மறைவை ஒட்டி, அவரின் திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, அஞ்சலியுடன் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கீ. வ.குப்பம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் தலைமை தாங்கிட, பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர் சி.கோபி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம், மாவட்டப் பிரதிநிதிகள், சி.மார்கபந்து, வெங்கடேசன், வி.எத்திராசன், ரகு, மற்றும் கழக முன்னனியினர் பலர் கலந்து கொண்டு, மலர் தூவி, அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வினை ஒன்றிய கழகத்துடன் ஒருங்கிணைந்து, முரசொலி தமிழ் மன்றம் முன்னின்று ஏற்பாடு செய்தது.

குமரி சங்கமம் - நம்ம ஊறு திருவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சி!

# சுற்றுலாப் பயணிகள் பல்லாயிரவர் கண்டுகளித்தனர்!

## மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகு மீனா தகவல்!

கன்னியாகுமரி, அக் 14-

தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க திருநெல்வேலி மண்டல கலைப்பண்பாட்டுத்துறையின் சார்பில், கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் நடைபெற்ற பிரம்மாண்டமான குமரி சங்கமம் -நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகு மீனா, 11.10.2024 அன்று முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள்.

இத்திருவிழாவில் திருநெல்வேலி மண்டலத்தில் நிகழ்த்தப்பட்டு வரும் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளான கொம்பு தப்பு, நையாண்டிமேளம், கரகாட்டம்,சிலம்பாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், கணியான்கூத்து, தேவராட்டம், மாடாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம், மரக்கால் ஆட்டம், தெம்மாங்கு பாடல், வில்லிசை, களியலாட்டம் மற்றும் தோல் பாவைக்கூத்து போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நேற்றைய தினம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து நேற்று (12.10.2024) சாத்தூர் கே.பி.நாகராஜன் குழுவினரின் நையாண்டி மேளம், கரகாட்டம், சிவகாசி கலைசுடர்மணி கே. பால்ராஜ் குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகளும், தச்சநல்லூர் ஆர். சங்கரபாண்டி குழுவினரின் கணியான்கூத்து நிகழ்ச்சியும், தோவாளை கலைமாமணி பரமசிவராவ் குழுவினரின் தோல் பாவை கூத்து நிகழ்ச்சியும், மேல்புறம் கலைவளர் மணி வின்சென் குழுவினரின் களரி நிகழ்ச்சியும், சங்கரன்கோவில் கலைவளர் மணி கு.முத்துராமலிங்கம் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், மரிய டேவிட் குழுவினரின் பறை, கரகம், ஒயிலாட்டம், கிராமிய பாடல், சாட்டை குச்சி ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளை நடத்திய குழுவினரை பாராட்டி பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற குமரி சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியில் சுமார் 375 கலைஞர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நடைபெற்ற குமரி சங்கமம் - நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கண்டு களித்தனர்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைப்பண்பாட்டுத் துறை உதவி இயக்குநர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண்ஜெகத் பிரைட், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.எஸ்.செல்வலெட்சுஷ்மா, கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ரமா தேவி, கிராமிய கலைஞர்கள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. - பி.கே.மூர்த்தி முன்னிலை! எல்.பி.எப்.மோகன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழா!

## அமைச்சர் கே.என்.நேரு - பேராசிரியர் தீபக் நாதன் நல உதவிகள் வழங்குகின்றனர்!

சென்னை, அக் .14-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - ஆதி திராவிடர் நலக் குழு சார்பில் தமிழர்களின் சுடர்திரா விடத் தொடர், பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு திராவிடத் தொடர்16, வாழும் திறனில் வெளிவானவர், மாற்று சக்தியின் வலுவானவர்கள் என்ற தலைப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (14.10.2024-திங்கட் கிழமை) மாலை 4 மணிக்கு, மோகன் கார்டன் அக்ரஹாரம், கொரட்டூரில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக் குழு மாவட்ட அமைப்பாளர் எல்.பி.எப். மோகன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே. மூர்த்தி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி , வி.இரமேஷ் என்கிற நீலகண்டன், எம்.சி., டாக்டர் ஜி. சாந்தகுமாரி எம்.சி., டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி., ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, எம்.சி. து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, சீ.லோகநாதன், க.மோகன்குமார், த.பிரகாஷ்குமார், ஷெட்டர் க.ஜெயபால், ஆசை ஆரோக்கியம், ஆர்.ஜெயபிரகாஷ், தில் மகேஷ், இரா.பாலமுருகன், டி.ஸ்ரீதரன், எஸ்.ஜெயபாலன், உமாமோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்கசாமி, வேளச்சேரி இ.ராமு, மு.சண்முகம், ஆ.சுந்தர் ராஜ், மு.விஜயகுமார், த.வ. லால், கே.செல்வம், கோ. முத்து குமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கே.இன்பசேகரன், இ. நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம், வி.துரை, எ.அசோகன், சி.விஜய், பி.எழில்மணி, ஆர். முனியன், ஏ.குமார், எம்.இ. மூர்த்தி, எம்.ராஜேஷ், ஆரோக்கியராஜ், அத்திப் பட்டு, வி.நிர்மல்குமார், இ. பிரகாஷ் இன்பன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

நலத்திட்ட உதவிகளை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, டிசம்பர் 3 இயக்கம் மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் பேராசிரியர் தீபக் நாதன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., பி.டி.சி. செல்வ ராஜ், ப.ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், கே. சந்துரு, சி.மகேஷ்குமார், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம். நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, எம்.விஜயகுமார், வே.உமாகாந்த், பரிதி இளம் சுருதி எம்.சி., ஆர்.வரதன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ.ஜெயின், சரிதாமகேஷ் குமார், ப. ஸ்ரீராமுலு, வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன், செ.வேலு, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, உஷா நாகராஜ், எம்.இ.சேகர், எஸ். உமா, எம்.கமல், க.பொற்கொடி, கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம்.இப்ராகிம், அ. நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கொரட்டூர் டி.முத்து, ஜி. ரங்கநாதன், அம்பத்தூர் எம். தேவராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தொண்டாமுத்தூர் தொகுதி செல்வபுரம் பகுதி கழக செயலாளர் கேபிள் மணியின் சகோதரி இந்துமதி அவர்கள் மறைவு செய்தி அறிந்து கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி இல்லத்திற்கு நேரில் சென்று குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார் உடன் கவுன்சிலர் சிவசக்தி பேரூர் கழக செயலாளர்கள் தண்டபாணி மற்றும் இரா.தண்டபாணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தொ.மூ.தியாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (12.10.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் ‘A’ சாலையின் நுழைவு வாயில் எண்.14 அருகில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.86 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு வரும் மருத்துவ சேவை மையத்தினை (Mini Clinic) அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், செயற்பொறியாளர் ராஜன் பாபு, மாமன்ற உறுப்பினர் வி.லோகு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.